**விளம்பர எண்:158.**

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
## அறிவிக்கை / விளம்பரம்

2006–2007 ஆம் ஆண்டுகளுக்கான, தொகுதி IV- பணியில் அடங்கிய **(பணி குறியீடு. 006)** பின்வரும் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்காக **22–04–2008** மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | பணி | பதவிக் குறியீட்டு எண் | காலி இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | **நிலஅளவர்** | தமிழ்நாடு நிலஅளவை மற்றும் நிலப்பதிவேடுகள் சார்நிலைப்பணி | **2800** | **93** |
| 2. | **வரைவாளர்** | | **2900** | **235** |

**2. முக்கிய தேதிகள்:-**

| | | நாள் | நேரம் |
|---|---|---|---|
| அ. | அறிவிக்கை நாள் | **07-03-2008** | – |
| ஆ. | விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | **22-04-2008** | மாலை 5.45 மணி |
| இ. | தேர்வு நடைபெறும் நாள் | **10-08-2008** | முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**3. சம்பள விகிதம் :- ரூ.3,200 - 85 – 4,900/-**

**4. காலியிடப் பகிர்வு:-**

| வ.எண் | அலகு / துறை | காலியிடங்கள் | GT | | | | BC | | | | BCC | BCM | MBC/DC | | | SC | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | GT_G | GT_W | GTD_W | GT_EX | BC_G | BC_W | BC_DW | BC_EX | BCC_G | BCM_G | MBC/DC_G | MBC/DC_W | MBC/DC_DW | SC_G | SC_W | SC_DW |
| 1. | **நிலஅளவர்** | **93** | 25 | - | 10 | - | 11 | - | - | - | - | - | 21 | - | - | 25 | - | 1 |
| 2. | **வரைவாளர்** | **235** | 50 | 5 | 20 | 1 | 34 | 5 | 10 | 1 | 5 | 1 | 34 | 3 | 12 | 34 | 4 | 16 |

***Unit-wise and Category-wise distribution of vacancies is available at Commission's Website "www.tnpsc.gov.in"***

**Abbreviations:**

GT - General Turn, BC - Backward Class(Other than BCC & BCM), BCC - Backward Class Christian, BCM - Backward Class Muslim, MBC/DC - Most Backward Class/ Denotified Communities, SC- Scheduled Caste, G - General, W - Women, DW - Destitute Widow, EX- Ex-servicemen.

**5. பொது விவரங்கள்:-**

அ. ஒவ்வொரு பதவிக்கும் மற்றும் அலகிற்கும் நியமன ஒதுக்கீட்டு விதி தனித்தனியே பின்பற்றப்படும்

ஆ. தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் அதே பிரிவைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்டும்.

இ. தெரிவு செய்யப்பட தேர்ச்சியும் தகுதியும் வாய்ந்த முன்னாள் இராணுவத்தினர் கிடைக்கப் பெறாவிடில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட காலியிடங்கள் அதே பிரிவைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் அல்லாதவரைக் கொண்டு நிரப்பப்டும்.

ஈ. உடல் ஊனமுற்றறோருக்கான இடஒதுக்கீட்டு விதி இத் தெரிவிற்கு பொருந்தும். இருப்பினும், அவர்களுக்கான சுழற்சி முறை (Reserved Turn) இத்தெரிவில் ஏற்படவில்லை.

உ. 'ஆதரவற்ற விதவை'களுக்கு நியமனம் அளிப்பதற்கான இட ஒதுக்கீடு, இந்நியமனங்களுக்குப் பொருந்தும். **(பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' பத்தி 4–ன் கீழுள்ள குறிப்பினைக் காண்க)**

ஊ. <u>உடற்தகுதிச் சான்றிதழ்</u> :

இப்பணி நியமனத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி/தமிழ்நாடு நீதி அமைச்சுப்பணி/ தமிழ்நாடு தலைமைச்செயலகப்பணியில் உள்ள பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்தில் உடற்தகுதி சான்றிதழை சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுவர். இப்பதவிக்கான பார்வையின் தரம் – தரம் –III அல்லது அதற்கு மேம்பட்டது.

<u>பார்வை தரம் –III கீழ்க்கண்டவாறு</u> :-

| | Better Eye | | Worse Eye |
|---|---|---|---|
| Distant Vision without glasses | 6/9 | OR | 6/9 |
| Distant Vision with glasses | 6/6 | | 6/12 |

Candidates with defective vision should produce eye fitness certificate from qualified Eye Specialist.

எ. உடல் ஊனமுற்றவர்கள், தங்கள் ஊனம், தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழு திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இராது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுமத்திடமிருந்து (Medical Board) பெற்று நியமனம் செய்யப்படுவதற்கு முன் அளித்திட வேண்டும்.

ஏ. அறிவிக்கப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும். தெரிவு செய்வதற்கு முன்போ அல்லது தெரிவின்போதோ உள்ள காலியிடங்களின் நிலைமைக்கேற்ப காலியிடமதிப்பீட்டில் மாறுதல் செய்யப்படலாம்.

ஐ. தெரிவு குறித்து எழுப்பப்படும் எந்த ஒரு கோரிக்கையும் தெரிவு முடிவுகள் வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் பெறப்படுதல் வேண்டும். 90 நாட்களுக்கு பின்பு பெறப்படும் தெரிவு குறித்த எந்தவொரு கோரிக்கையும் கவனிக்கப்படமாட்டாது.

ஒ. அரசாணை நிலை எண். 241 ப.(ம).நி.சீ.(கே) துறை, நாள் 29.10.2007 –ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 30% இடஒதுக்கீட்டில் 3.5% பி.வ. கிறித்துவருக்கும், 3.5 % பி.வ. முஸ்லீம்களுக்கும் ஒதுக்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த அரசாணையின்படி இட ஒதுக்கீட்டை கோரும் விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப்படிவத்தின் கலம் 6, 7 மற்றும் 7(a)–யினை கட்டாயமாக நிரப்பி அதற்கு கீழுள்ள கட்டத்தை கருமையாக்கவேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குண்டான அனைத்து சலுகைகள் / விதி தளர்வுகள் / பலன்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் ஆகியோருக்கும் பொருந்தும்.

<u>குறிப்பு</u> :

**தேர்வாணையத்தின் பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள், தகவல் சிற்றேடு, OMR விண்ணப்பப் படிவம் ஆகியவற்றில் எங்கெங்கு பி.வ. (பிற்படுத்தப்பட்ட வகுப்பு) என குறிப்பிடப்பட்டுள்ளதோ அதனை பி.வ. (பி.வ.கி. மற்றும் பி.வ.மு. அல்லாதோர்) பி.வ.கி., பி.வ. மு . என்று வாசிக்கவும்).**
(பி.வ.கி – பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர், பி.வ. மு – பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்).

## 6. <u>தகுதிகள்</u> :–

**(அ)** <u>வயது</u> ( 01– 07–2008 அன்று):

(i) <u>குறைந்தபட்ச வயது வரம்பு –18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். (அனைத்து விண்ணப்பதாரருக்கும்)</u>

(ii) <u>அதிகபட்ச வயது வரம்பு :-</u>

(அ) ஆ.தி., ப.கு. மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் – 35 வயதுக்குள்

(ஆ) மி.பி.வ./ சீ.ம மற்றும் பி.வ. (பி.வ.கி. மற்றும் பி.வ.மு. அல்லாதோர்), பி.வ.கி., மற்றும் பி.வ.மு. – 32 வயதுக்குள்

(இ) ஆ.தி., ப.கு. , மி.பி.வ./ சீ.ம., பி.வ. (பி.வ.கி. மற்றும் பி.வ.மு. அல்லாதோர்), பி.வ.கி. மற்றும் பி.வ.மு. ஆகியோர் அல்லாதவர் – 30 வயதுக்குள்

(ஈ) அம்பத்தூர், தொழிற்பயிற்சி நிலையத்தில் நிலஅளவர் பயிற்சி பெற்றவர் – 35 வயதுக்குள்

ஆ.தி., ப.கு. , மி.பி.வ./ சீ.ம., பி.வ (பி.வ.கி. மற்றும் பி.வ.மு. அல்லாதோர்), பி.வ.கி., பி.வ.மு. மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் குறைந்தபட்ச பொதுக்கல்வித்தகுதியைக் காட்டிலும் மேற்பட்ட கல்வித்தகுதியைப் பெற்றிருப்பின் அதாவது புகுமுக வகுப்பு / மேல்நிலைப்பள்ளி /பட்டயப் படிப்பு /பட்டப்படிப்பு ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வயது வரம்பு இல்லை.

**<u>குறிப்பு</u>**:

**(1)** அரசாணை எண்.**98**, பணியாளர் (மற்றும்) நிருவாகச் சீர்திருத்த (எஸ்) துறை, நாள் **17.07.2006** மற்றும் அரசாணை எண்.**152**, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (எஸ்) துறை, நாள் **18.09.2006** மற்றும் அவற்றை அடுத்து பெறப்பட்ட தெளிவுரைகளின்படி பணிநியமன தடை ஆணையால் பாதிக்கப்பட்ட வேலையில்லா இளைஞர்களுக்கும், பணியில் இருப்பவர்களுக்கும் உச்ச வயது வரம்பில் **5** ஆண்டுகள் தளர்த்தப்படும்.

**(2)** மாநில / மத்திய அரசில் முறையாக (Regular) ஐந்தாண்டுகள் பணிபுரிந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.கி. மற்றும் பி.வ.மு. அல்லாதோர்), பிற்படுத்தப்பட்ட வகுப்பு கிறித்துவர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் ஆகிய சாதிப் பிரிவுகளைச் சாராத மற்ற விண்ணப்பதாரர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள் ஆவார்கள்.

**(3)** டான்சி நிறுவனத்தில் பணிபுரிந்து ஆட்குறைப்புக்குள்ளான தொழில்நுட்பத் தகுதியுள்ள, மற்றும் தொழில்நுட்பத் தகுதியில்லாத பணியாளர்கள் / அரசுக் கழகங்கள் மற்றும் அரசின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் இதுவரை பணியிலமர்த்தப்படாமலிருப்பவர்கள் இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு தவிர எல்லா தகுதிகளும் இருக்கும் பட்சத்தில் இவ்வறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவார்கள் (சான்று சமர்ப்பிக்க வேண்டும்) விதிமுறைகளில் உள்ள வயது வரம்பு இவர்கள் பொருட்டு அரசால் தளர்த்தப்படும்.

### (ஆ) <u>கல்வித் தகுதி :</u>

இவ்வறிவிக்கை நாளான **07–03–**2008அன்று கீழ்கண்ட அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.

குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி ;

**<u>விளக்கம்:</u>**

குறைந்தபட்ச பொதுக் கல்வித் தகுதி என்பது ;

(i) பள்ளியிறுதி (SSLC) வகுப்பில் தேர்ச்சி பெற்று இம்மாநில பல்கலைக்கழகங்களின் கீழுள்ள கல்லூரிக் கல்வி படிப்பில் சேர்வதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும். **(11 ஆண்டு படிப்பு)**

அல்லது

(ii) இம்மாநில பள்ளி இறுதி வகுப்பு (SSLC) தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் **(10 ஆண்டு படிப்பு)**

**(தேர்வாணைய "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" வரிசை எண் 7 மற்றும் 9 ஐ பார்க்கவும்.)**

**<u>குறிப்பு</u>** :

நிலஅளவர் பதவியை பொருத்த அளவில் அனைத்து தகுதிகளும் சமமாக இருக்கும்பட்சத்தில் தொழிற் பயிற்சி நிலையத்தில், நிலஅளவர் பயிற்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### (இ) <u>தமிழில் தகுதி :</u>

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அறிவிக்கை நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும். (மேலும் விபரங்களுக்கு "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள் பத்தி 10ஐக் காண்க.)

**7. <u>எழுத்துத் தேர்வு பாடத்திட்டம்:–</u>**

**<u>தொகுதி –IV பணி S.S.L.C தரம் (கொள்குறி வகை)</u>**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| **<u>ஒற்றை தேர்வுத்தாள்</u>**<br>பொதுஅறிவு<br>(SSLC– தரம்) (100 வினாக்கள்) +<br>பொதுத்தமிழ் / பொது ஆங்கிலம்<br>(SSLC– தரம்) (100 வினாக்கள்) | 3 மணி நேரம் | [150 +150]<br>300 | **90** |

<u>குறிப்பு:</u>

**(i)** வினாத்தாள் இரண்டு மாதிரிகளைக் கொண்டது அதாவது 1) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்)மற்றும் பொதுத்தமிழ் வினாக்கள் (100 வகைகள்) 2) பொது அறிவு வினாக்கள் (100 வகைகள்) மற்றும் பொது ஆங்கிலம் வினாக்கள்(100 வகைகள்). விண்ணப்பதாரர்கள் முதல் 100 வினாக்களுக்கு பொது அறிவுத் தேர்வில் பதிலளிக்க வேண்டும். அடுத்த 100 வினாக்களுக்கு அவர்கள் பொதுத்தமிழிலோஅல்லது பொது ஆங்கிலத்திலோ பதிலளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் OMR விண்ணப்பப்படிவத்தில் கட்டாய பாடம் என்ற தலைப்பின் கீழ் உள்ள கலம் 22–ல் இரண்டாவதாக வரும் 100 வினாக்களை பொதுத்தமிழில் எழுதுகிறாரா அல்லது பொது ஆங்கிலத்தில் எழுதுகிறாரா என தெளிவாக குறிப்பிட வேண்டும். OMR விண்ணப்பப்படிவத்தில் கலம் 22 ஐ நிரப்பாத விண்ணப்பதாரர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படுவர்.

(ii) பொது அறிவு வினாத்தாள் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும், பொதுத்தமிழ் வினாத்தாள் தமிழிலும், பொது ஆங்கில வினாத்தாள் ஆங்கிலத்திலும் இருக்கும்.

(iii) மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கான பாடதிட்டம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணைய செய்தி அறிவிப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பாடதிட்டம் | பக்கம் | தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செய்தி வெளியீட்டு எண் மற்றும் நாள் |
|---|---|---|---|
| 1. | பொது அறிவு | 490 | எண்.16, நாள் 01.08.2004 |
| 2. | பொதுத் தமிழ் | 721 | எண்.11, நாள் 16.05.2001 |
| 3. | பொது ஆங்கிலம் | 722 | எண்.11, நாள் 16.05.2001 |

மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களுக்கான பாடதிட்டம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய இணைய தளமான **<u>www.tnpsc.gov.in</u>** –லும் கிடைக்கும்.

**8. <u>தேர்வு மையங்கள்</u>:–**

தகவல் சிற்றேட்டில், பிற்சேர்க்கை –ல் பிரிவுகள் A, B, C, D மற்றும் E ல் குறிப்பிடப்பட்டுள்ள 104 தேர்வுமையங்களில் எழுத்துத் தேர்வு நடைபெறும்.

<u>குறிப்பு:</u>

i) விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு மையத்தைத் தேர்வு செய்து தங்கள் சொந்த செலவில் சென்று தேர்வு எழுத வேண்டும்.

ii) தேர்வு மையத்தை மாற்றக்கோரி வரும் கோரிக்கை ஏற்கப்படாது.

iii) தேர்வு மையங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ, குறைக்கவோ அல்லது விண்ணப்பதாரர்களை வேறு மையங்களுக்கு ஒதுக்கீடு செய்யவோ தேர்வாணையத்திற்கு உரிமையுண்டு.

**9. <u>விருப்ப முன்னுரிமை :-</u>**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பட்டியல் வெளியிட்ட பின்பு விண்ணப்பதாரர்களின் சான்றிதழ்களை சரிபார்க்கும் போது விண்ணப்பதாரர்கள் தாங்கள் எந்த அலகிற்கு ஒதுக்கப்படவேண்டும் என்ற தங்கள் விருப்பத்தினை தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுவர். இருப்பினும், OMR விண்ணப்பப்படிவத்தின் கலம் 23ல் எந்த பதவிக்கு தாங்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தினை தெரிவிக்க வேண்டும்.

**10.<u>தெரிவுசெய்யும் முறை:–</u>**

விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள், நியமனங்களுக்கான இட ஒதுக்கீட்டு விதி மற்றும் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட பதவி விருப்ப முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் இறுதித் தெரிவு மேற்கொள்ளப்படும்.

**11. <u>தேர்வுக் கட்டணம் :–</u> ரூ.75/– (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்)**

தேர்வுக் கட்டணம், தமிழ்நாடு /புதுச்சேரியில் உள்ள ஏதேனும் ஒரு தலைமை அஞ்சலகங்களின் மூலமாகவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட துணை அஞ்சலகங்கள் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும் (அஞ்சலகங்களின் பெயர் பட்டியல் தேர்வாணையத்தின் இணைய தளமான **www.tnpsc.gov.in** – ல் உள்ளது.) பணம் செலுத்தியதற்கான அஞ்சல் ரசீதினை விண்ணப்பப் படிவத்தில் அதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் ஒட்டுதல் வேண்டும். (மேலும் விவரங்களை, தகவல் சிற்றேட்டின் பகுதி – III இன் கீழுள்ள பத்தி–2லும், தேர்வுக் கட்டண சலுகைகளுக்கு "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 12–லும் காணலாம்) .

**<u>குறிப்பு :</u>**

அஞ்சல் ரசீது பெறும்பொழுது அஞ்சலகத்திற்கு சேவைக் கட்டணமாக அனைத்து விண்ணப்பதாரர்களும் ரூ. 5 (ரூபாய் ஐந்து மட்டும்) செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர் அஞ்சல் ரசீது பெறுவதற்கு அஞ்சலகக் கவுண்டரில் உள்ள எழுத்தரிடம் OMR விண்ணப்ப எண்ணை (ஆன்லைன் மூலம் விண்ணப்பிப்பவர் தவிர) தெரிவிக்க வேண்டும்.

**12.<u>விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டியவைகள்:–</u>**

<u>தேர்வாணையத்தின் "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" பத்தி 15 –லும், மற்றும் தகவல் சிற்றேட்டில் பகுதி II இன் கீழ் இனம் 25–லும் குறிப்பிடப்பட்டுள்ளபடி,</u> விண்ணப்பதாரர்கள் தேவையான அனைத்துச் சான்றிதழ்களின் நகல்களையும் (அவர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதிகளுக்குரிய ஆதாரங்கள் உட்பட) மற்றும் <u>கட்டண விலக்கு கோரப்படவில்லையெனில், ரூ.75/– (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்) மதிப்புள்ள அஞ்சல் ரசீதினை</u> விண்ணப்பப் படிவத்தில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டி அனுப்பவேண்டும். **<u>மூலச் சான்றிதழ்கள் அனுப்பப்படக்கூடாது.</u>** ‘ஆன்லைன்’ மூலம் விண்ணப்பிப்பவர்கள் இந்த அறிவிக்கை/விளம்பரத்தின் பத்தி 15 இல் துணை பத்தி ‘ஈ’ யைப் பார்க்கவும்.

**மேலே குறிப்பிடப்பட்டுள்ளபடி சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**13.<u>தடையின்மைச் சான்றிதழ்:–</u>**

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே மத்திய அரசு அல்லது இந்தியாவில் ஒரு மாநில அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகள் அல்லது பல்கலைக்கழகங்கள் அல்லது அரசு சார்பு நிறுவனங்கள் அல்லது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் மற்றும் அதுபோன்ற அமைப்புகள் ஆகியவற்றில் (நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ) ஏற்கனவே பணியில் இருப்பவர்கள் <u>தங்கள் துறைத் தலைவர் மூலமாகவோ அல்லது வேலையளிப்போர் (Employer) மூலமாகவோ விண்ணப்பங்களை அனுப்பத் தேவையில்லை. அதற்குப் பதிலாக, தமக்கு வேலையளிப்பவர்களுக்கு எழுத்துமூலம் தெரிவித்துவிட்டு, தேர்வாணையத்திற்கு நேரடியாக விண்ணப்பிக்கலாம்.</u> எனினும், தெரிவு செய்யப்பட்டால், வேலையளிப்பவரிடமிருந்து "தடையின்மைச் சான்றிதழ்" பெற்று அளித்திட வேண்டும். தடையின்மைச் சான்றிதழ் வழங்கிய பிறகு, மற்றும் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு அவர் மீது ஏதாவது குற்ற வழக்கு/ ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டால் அல்லது ஏதாவது தண்டனை வழங்கப்பட்டால் இந்த உண்மையை இத்தகைய விண்ணப்பதாரர்கள் இந்த நியமனம் தொடர்பான பதிவு எண்ணை குறிப்பிட்டு உடனடியாக தேர்வாணையத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

**14.<u>சலுகைகள்:–</u>**

ஆ.தி., ப.கு. , மி.பி.வ./ சீ.ம., பி.வ., பி.வ.கி. பி.வ.மு. மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், 40 வயதிற்குட்பட்ட விடுவிக்கப்பட்ட மற்றும் வேலைசெய்து வரும் மாநில அரசின் தற்காலிகப் பணியாளர்கள், பிணைத் தொழிலாளிகள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் தேர்வாணையத்தின், <u>"பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்"</u> கொடுக்கப்பட்டுள்ளன.

**15.<u>விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல்:–</u>**

**(அ)** OMR விண்ணப்பப்படிவத்துடன் விண்ணப்பப் படிவத்தை நிறைவு செய்வதற்குரிய பொது விவரங்கள் அடங்கிய "தகவல் சிற்றேடு", தேர்வாணையத்தின், "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்" மற்றும் விண்ணப்பம் அனுப்பப்படுவதற்கான உறை ஆகியவற்றைத் தமிழ்நாடு /புதுச்சேரியில் உள்ள ஏதேனும் ஒரு தலைமை அஞ்சலகங்களின் மூலமாகவோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட துணை அஞ்சலகங்கள் (236அஞ்சலகங்கள்) மூலமாக ரூ.30/– (ரூபாய் முப்பது மட்டும்) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

(அஞ்சலகங்களின் பெயர் பட்டியல் தேர்வாணையத்தின் இணைய தளமான **www.tnpsc.gov.in** – ல் உள்ளது.)

(ஆ) OMR விண்ணப்பப் படிவத்தை, சென்னை–600 002, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் விற்பனைக் கவுண்டரிலும் அனைத்து வேலை நாட்களிலும், (பகல் 1.30 மற்றும் 2.00 மணி இடையிலான மதிய உணவு இடைவேளை நேரம் தவிர) விண்ணப்பம் வந்து சேர்வதற்கான கடைசி நாள் மாலை 5.00 மணி வரையில் ரூ.30/– (ரூபாய் முப்பது மட்டும்) ரொக்கமாக மட்டும் செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம். **விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.**

இ) விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப் படிவத்தை (AD அல்லது தொடர்ந்து வரும் வரிசைகள்) மட்டுமே பயன்படுத்த வேண்டும். தட்டச்சு செய்யப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட அல்லது ஒளிநகலிடப்பட்ட அல்லது புகைப்பட நகல் எடுக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது; அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ஈ) விண்ணப்பதாரர்கள், தேர்வாணையத்தின் **www.tnpsc.gov.in** என்னும் இணையதளத்தில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பிக்கும் வசதியையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்லைனில் பதிவு செய்வதற்கு முன்பாக, ஏதேனும் ஒரு தலைமை அஞ்சலகம்/ துணை அஞ்சலகத்திலிருந்து பெறப்பட்ட ரூ.105/– (அதாவது, விண்ணப்பக் கட்டணம் ரூ.30/– தேர்வுக் கட்டணம் ரூ.75/–)க்குரிய அஞ்சல் ரசீது ஒன்றைத் தயாராக வைத்துக்கொண்டு, விண்ணப்பதாரர்கள் "ஆன்லைன்" மூலம் விண்ணப்பிக்கலாம். தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்கு கோரும் விண்ணப்பதாரர், விண்ணப்பக் கட்டணமான ரூ.30 க்குரிய அஞ்சல் ரசீதினைத் தயாராக வைத்திருக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம்/தேர்வுக் கட்டணத்திற்குப் பெறப்பட்ட அஞ்சல் ரசீதை விண்ணப்பப் படிவத்தில் அதற்கென அளிக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டுதல் வேண்டும். ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கும் இவ்வறிவிக்கை / விளம்பரம்/ தேர்வாணையத்தின், "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகள்"/தகவல் சிற்றேட்டில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள் பொருந்தும். <u>விண்ணப்பதாரர் ஆன்லைனில் விண்ணப்பிக்கும்பொழுது, (இணையதளத்திலிருந்து விண்ணப்பப்படிவத்தை அச்சிட்டு எடுத்து, கையொப்பமிடப்பட்டு) அஞ்சல் ரசீதுடனும், சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழ்களின் நகல்களுடனும் தேர்வாணையத்தின் அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெறுவதற்கான கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்போ கிடைக்குமாறு விண்ணப்பத்தினை அனுப்பி வைத்திட வேண்டும். தவறினால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.</u> ஆன் லைன் மூலம் விண்ணப்பிக்கும் வசதி 20–04–2008 மாலை 5.45 மணியுடன் முடிவடைகிறது.

**16.விண்ணப்பம் பெறுதல்:–**

**(அ)** OMR விண்ணப்பப்படிவத்தை தேர்வாணைய அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு முன்பாகப் பின்வரும் இனங்களையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(i) உறுதிமொழிக்குக் கீழ் விண்ணப்பதாரர், பால்பாயின்ட் பேனாவினால் அல்லது பவுண்டன் பேனாவினால் மட்டும் கையொப்பம் இட வேண்டும். **கையொப்பம் இடப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு உரியதாகும்.**

(ii) **பதவி முன்னுரிமையினை** OMR **விண்ணப்பப் படிவத்தின் கலம் 23 ல் குறிப்பிட்டு** அவற்றிற்கு கீழே உள்ள கட்டத்தை கருமையாக்க வேண்டும்.

(iii) OMR விண்ணப்பப் படிவத்தின் கலம் 14(d), 23(a) ஆகியவற்றை நிரப்பத் தேவையில்லை.

(iv) OMR விண்ணப்பப் படிவத்தின் கலம் 1, 1 (a), 3, 4, கலம் 22–ன் கீழுள்ள கட்டாய பாடம் மற்றும் கலம் 23 ஆகியவைகளை இந்த அறிவிக்கை/விளம்பரத்தில் உள்ள விவரங்களின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

(v) OMR விண்ணப்பப் படிவத்தின் கலம் 6, 7 மற்றும் 7(a) ஆகியவைகளை நிரப்பி அவற்றிற்கு கீழே உள்ள கட்டத்தை கருமையாக்க வேண்டும்.

(vi) தொழிற் பயிற்சி நிலையத்தில் (ITI), நிலஅளவர் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் OMR விண்ணப்பப்படிவத்தின் கலம் 25ல் உள்ள இனம் 5 ஐ கருமையாக்கி, அதற்குரிய சான்றொப்பமிடப்பட்ட சான்றிதழை இணைக்க வேண்டும்.

(ஆ) **நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தினை, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை–600002 எனும் முகவரிக்கு 22–04–2008 மாலை 5.45 மணிக்கு வெகு முன்னதாகவே கிடைக்குமாறு பதிவஞ்சலில்/விரைவு அஞ்சலில் அனுப்பி வைத்திட வேண்டும்.**

**செயலாளர்**